Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

முரசு 2 8-3-1985 வெள்ளிக்கிழமை (மாசி 25-ஐ ஆகிர் 15) முழக்கம் 32

## பென்ஷன்காரருக்கு நல்ல செய்தி!

## செவ்வாய்க்கிழமை முதல் தனித்தனி காசோலை கிடைக்கும்

குருநகர் இலங்கை வங்கிக் கிளையில் ஓய்வூதியம் பெறும் பென்ஷன்காரரின் அவல நிலையைப் போக்குவதற்கான புதிய திட்டமொன்றை யாழ். அரசாங்க செயலகம் இப்போது அமுல் செய்ய முன்வந்துள்ளது. இதன்படி பெப்ரவரி மாத பென்ஷனை இன்னமும் பெறாதிருப்பவர்களுக்கு தனித்தனி காசோலைகள் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இம் மாதம் 12-ம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் தினமும் ஐநூறு ஒய்வூதியகாரருக்கு காசோலை வழங்கப்படும் செவ்வாய் முதல் எதிர்ந்த

—4ஆம் பக்கம் பார்க்க

# கொழும்பு - கிளிநொச்சி யாழ்தேவி புகையிரத சேவை நேற்று முதல் மீண்டும் ஆரம்பமானது

கொழும்புக்கும் வவுனியாவுக்குமிடையே கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக நடைபெற்று வந்த யாழ்தேவி ரயில் சேவை நேற்று திடீரென கிளிநொச்சிவரை நடத்தப்பட்டது.

ஜனவரி மாதம் 19ம் திகதி முறிகண்டியில் நடைபெற்ற ரயில் மீதான கண்ணிவெடி தாக்குதலுக்குப் பின்னர் கிளிநொச்சிவரை ரயில் சேவை நடத்தப்படவில்லை.

சிர்குலைந்த ரயில் பாதை செப்பனிடப்பட்ட பின்னர் நேற்று பரீட்சார்த்தமாக ரயில் சேவை கிளிநொச்சி வரை நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்று முதல் கிளிநொச்சி வரை தொடர்ந்தும் யாழ்தேவி ரயில் சேவையீடுபடுத்தப்படும் என்று புகையிரதப் பகுதி அதிகாரிகள் தெரிவித்தனர். நண்பகல் 12 மணிக்கு கிளிநொச்சியை வந்தடையும் யாழ்தேவி, இரண்டு மணிக்கு அங்கிருந்து கொழும்பு புறப்படும்.

நேற்று 12 நிமிடம் தாமதமாக ரயில் வந்தது.

# வடபகுதிக் கடலில் மீன்பிடிக்க அடுத்த வாரம் முதல் அனுமதி!

## யாழ். அரசாங்க செயலகத்தின் சிபார்சு ஏற்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தகவல்

(கொழும்பு)

கடல் கண்காணிப்பு வலயப் பிரதேசங்களில் நடைமுறையிலிருந்து வரும் மீன் பிடித் தடையை ஓரளவுக்கு நீக்கி, குறிப்பிட்ட சில கடற் பகுதிகளில் மீன் பிடிக்க அனுமதி வழங்கும் திட்டத்தை அடுத்த வாரம் முதல் நடைமுறைக்குக் கொண்டு வர உத்தேசித்துள்ள தேசிய பந்தோபஸ்து அமைச்சு, சம்பந்தப்பட்ட விரிவான விபரங்களை நாளை அல்லது நாளை மறுதினம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கவுள்ளது.

எந்தெந்தக் கடல் பகுதிகளில் மீன் பிடிக்க அனுமதி வழங்குவது என்பது பற்றிய பட்டியல் தயாரிப்பு வேலை கடற்றொழில் அமைச்சர் பெஸ்டஸ் பெரேராவின் நேரடி மேற்பார்வையில் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றது.

ஏற்கனவே யாழ்ப்பாண அரசாங்க செயலக அதிகாரிகள் சிபார்சு செய்த கடற் பகுதிகளில் மீன் பிடிக்க அனுமதிப்பதற்கு கடற்றொழில் அமைச்சு அதிகாரிகள் இணக்கம் கண்டுள்ளதாக மேற்படி அமைச்சு அதிகாரியொருவர் தெரிவித்தார் கடந்த நவம்பர் மாதத்தில் யாழ்ப்பாணக் கடற்பகுதியில் மீன்பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்ட பகுதிகளிலேயே இம்முறையும் மீன்பிடிக்க அனுமதி வழங்குமாறு சிபார்சு செய்யப்பட்டிருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

வடபகுதி மீனவர்கள் தொழி

-4ஆம் பக்கம் பார்க்க

## அடையாளம் காணப்படாத இரு இளைஞர்களின் சடலம்

சுமார் முப்பது வயது மதிக்கத்தக்க இருவரின் சடலங்கள் அடையாளம் காணப்படாமல் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளன.

சாரம் அணிந்தவாறு இவ்விரு சடலங்களும் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது

நேற்று மாலை 5-45 க்குப் பின்னர் பாதுகாப்புப் படையினரால் இச்சடலங்கள் ஒப்படைக்கப்பட்டதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

பெருந்தெருக்கள் திணைக்களத்திற்குச் சொந்தமான ஜீப் ஒன்றில் சென்று கொண்டிருந்த தீவிரவாதிகள் மீது பாதுகாப்புப் படையினர் மேற்

— 4 ஆம் பக்கம் பார்க்க

## கிளிநொச்சி வழமைக்கு திரும்புகிறது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகரம் மெல்ல, மெல்ல வழமைக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறது. புதன் கிழமை சந்தை கூடியதைத் தொடர்ந்து மக்கள் நடமாட்டமும் படிப்படியாக அதிகரித்துக் கொண்டிருக்கிறது.

அதேவேளை, மக்கள் மத்தியில் இனந்தெரியாத ஒருவித பீதியும் பரபரப்பும் காணப்படுகிறது.

## யாழ். வீதிகளிலுள்ள தபால் பெட்டிகளில் கடிதங்களைப் போடாதீர்கள்!

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள்ளிருக்கும் தபால் பெட்டிகளில் போடப்படும் கடிதங்களைச் சேகரிக்கும் வேலைகளை யாழ்ப்பாணம் தபால் நிலையம் மறு அறிவித்தல்வரை பின்போட்டுள்ளது.

தபால் சேகரிப்பு வான் கொள்ளையை அடுத்துகொழும்பிலுள்ள தலைமைக்காரியாலயத்திலிருந்து வந்த உத்தரவைத் தொடர்ந்தே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தபால் நிலைய சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இதனால், யாழ். மாநகர எல்லைக்குள் வசிப்பவர்கள் தங்கள் கடிதங்களை வீதிகள், உப தபால் நிலையங்களிலுள்ள தபால் பெட்டிகளில் போடா

-4ம் பக்கம் பார்க்க

## வடமராட்சி நேற்று...

(உடுப்பிட்டி)

நேற்று முன்தினம் கரவெட்டிப் பகுதியில் நடைபெற்ற சம்பவங்களைத் தொடர்ந்து நேற்றும் இப்பகுதியில் பதற்றம் நிலவியது. சில கடைகள் மட்டும் திறக்கப்பட்டிருந்தன.

—4ம் பக்கம் பார்க்க

## பல்கலைக்கழக ஆசிரியர் அறிக்கை

## தமிழர் தனிப் பண்பாட்டை எவ்வேளையும் கைவிடலாகாது

''தமிழர்களுக்கென்று ஒரு தனிப்பண்பாடு உண்டு. அதனை எந்த நிலையிலும் கைவிடுதல் கூடாது'' என்று தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயக் கொள்ளை தொடர்பாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

சங்கத் தலைவர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, காரியதரிசி செ. கிருஷ்ணராஜா ஆகியோரால் ஒப்பமிடப்பட்டு வெளியிடப்பட்ட இவ் அறிக்கையின் விபரம் வருமாறு;

தெல்லிப்பளைத் துர்க்கா தேவி அம்மன் ஆலயத்தில் நடைபெற்ற கொள்ளை பற்றி அறிந்து ஆழ்ந்த கவலையையும்

—4-ஆம் பக்கம் பார்க்க

## குருநகர் மக்கள் செல்கின்றனர்

குருநகர் முகாமுக்கு அருகிலுள்ள வீடுகளிலிருந்து வெளியேறியவர்கள், நேற்று தமது வீடுகளின் கூரை, கதவு, யன்னல் முதலியவற்றை கழற்றிச் சென்றனர். இவற்றை முகாமின் அதிகாரிகளின் அனுமதி

-4ம் பக்கம் பார்க்க

## பூஸாவிலிருந்து 50 இளைஞர் 12ம் திகதி விடுதலை பெறுவர்

பூஸாவிலுள்ள தமிழ் இளைஞர்களில் ஐம்பது பேர் 11ம் திகதி திங்கட்கிழமை விடுவிக்கப்படுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது

11ம் திகதி பூஸாவிலிருந்து கொழும்பு கொண்டுவரப்படும் இவர்களை, 12ம் திகதி யாழ்தேவி மூலம் கிளிநொச்சி கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ். அரச அதிபர் திரு எம். பஞ்சலிங்கம் தெரிவித்தார்.

—4-ஆம் பக்கம் பார்க்க

# மாமாங்கம், அமிர்தகழி பகுதிகளில் பல வீடுகளும் தீப்பற்றி எரிந்தன!

(மட்டுநகர்)

மட்டுநகருக்கு அண்மித்த பகுதிகளில் நேற்றுத் திடீரென இடம்பெற்ற முற்றுகையை அடுத்து அப்பகுதிகளில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

மாமாங்கம், அமிர்தகழி, புன்னைச்சோலை ஆகிய கிராமங்கள் சுற்றி வளைக்கப்பட்டதைத் தொடர்ந்து பல இடங்களிலிருந்து புகை கிளம்பத் தொடங்கியது.

சில மணி நேரங்களின் பின்னர் சுமார் இருபத்தைந்து முப்பது வீடுகள் இப்பகுதியில் தீப்பற்றி எரிந்திருக்கக் காணப்பட்டன. பல வீடுகளில் காணப்பட்ட பெறுமதியான பொருட்கள் உடைத்து, சேதப்படுத்தியும் கிடக்கக் காணப்பட்டன.

இளவயதினரான பலர் மேல் விசாரணைக்காகக் கொண்டு செல்லப்பட்டதாகவும் தெரிய வந்துள்ளது.

அதேவேளையில், மட்டுநகர் சிவானந்த வித்தியாலயத்தின் அறைகள் நேற்று முன்தின

—4 ஆம் பக்கம் பார்க்க

## குருநகர் இலங்கை வங்கி

## தொடர்ந்து மூடிய நிலையில்; தலைமைப பீடமும் மௌனம்

பணம் கொடுக்கல், வாங்கல் செய்யும் இலங்கை வங்கியின் குருநகர் கிளை தொடர்ந்தும் இயங்காதிருப்பதால் யாழ்ப்பாணத்தில் பல்வேறு துறையைச் சேர்ந்த மக்களும் பெரும் கஷ்டத்தை எதிர் கொண்டு வாழும் நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த மாதச் சம்பளத்தைக் கூட இன்னமும் பெறாத பல ஆசிரியர்களும், ஓய்வூதியம் பெறாத பல பென்ஷன்காரரும் தினமும் தங்கள் அலுவலக

—4-ஆம் பக்கம் பார்க்க

## கரை ஒதுங்கிய ஆண் சடலம்

(வேலணை)

வேலணை தெற்கு துறையூர் கடற்கரையில் உருக்குலைந்த நிலையிலான சடலமொன்று கரையொதுங்கியது. இச் சட

—4-ஆம் பக்கம் பார்க்க

## வரி விளம்பரம்

### காணவில்லை

**உருக்கமானவேண்டுகோள்**

குரும்பசிட்டி தெல்லிப்பளையைச் சேர்ந்த நவரத்தினம் ஜீவகுமார் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை, வாகனம் செலுத்தும் அனுமதிப்பத்திரம், வாகன உடைமை மாற்றுப் புத்தகம். வரி 85. காப்புறுதிப் பத்திரங்கள், ACI தொழிற்சாலை வேலைக்கான அடையாள அட்டை மற்றும் சில மிக முக்கிய பொருட்கள் அடங்கிய பேர்ஸ் ஆகியவற்றைக் காணவில்லை. கண்டெடுத்தவர்கள் மேற்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அன்பாக கேட்டுக் கொள்கிறேன். தகுந்த சன்மானம் வழங்குவதுடன் பெரிய உதவியாகவும் இருக்கும்.

நன்றி

### தவறிவிட்டது

திருமதி அரியமலர் அருமைநாயகம் என்பவருடைய அடையாள அட்டையும் பணமும் தொலைந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 2-ம் குறுக்குத் தெருவிலுள்ள 40-ம் இலக்க வீட்டில் அல்லது ஈழமுரசு காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.

எப்பொருளானாலும் வாங்கவும்-விற்கவும் ஒவ்வொரு நாளும் வாருங்கள்

ஏலவிற்பனை நிலையம்,
கோப்பாய்

### பாராட்டு

(ஏழாலை)

க. பொ த. ச தாரண தர விசேட பரீட்சை எதுவித அசம்பாவிதங்களுமின்றி நடைபெற்று வருதல் குறித்து மாணவர்களும், பெற்றோரும், கல்வித் திணைக்கள அதிகாரிகளும் பாராட்டுத் தெரிவிக்கின்றனர் பரீட்சைக்கு எவ்வித குந்தகமும் நேராத வகையில் கண்காணிப்பு வழங்கும் இளைஞர் இயக்கங்களை அவர்கள் மனதாரப் பாராட்டியுள்ளனர்.

**துணைவேந்தர் பேச்சு:**

# கந்தபுராணத்தின் உண்மை; அதிகார மமதை நிலைக்காது

(ஏழாலை)

சைவ சித்தாந்தக் கருத்துக்களை மட்டுமல்ல தர்மத்திற்கும். அசர்மத்திற்கும் எதிரான போராட்டத்தையும், அப் போராட்டத்திலே தர்மம் வெற்றி கொள்வதனையுமே கந்தபுராணம் காட்டுகிறது. அதிகாரமமதையால் கொடுங்கோலாட்சி புரிபவர்களின் கொட்டம் மட்டந் தட்டப்படுவதனைத் தமிழ் மக்களுக்குச் சூசகமாகச் சொல்வது கந்தபுராணம்!''

இவ்வாறு யாழ். பல்கலைக் கழகத் துணை வேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் நடைபெற்ற அகில இலங்கைச் சைவ மகா சபையின் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

கூட்டத்திற்கு மகாசபைத் தலைவர் திரு நம. சிவபிரகாசம் தலைமை வகித்தார். பேராசிரியர் வித்தியானந்தன் மேலும் தனதுரையில் சமயம், சமயத்திற்கு உதவுவது. துன்பத்திலும் சமயம் உதவும். அநீதியை ஒழிக்கவும் உதவும். இன்றைய இளைஞர்களும், மக்களும் இவ்வுண்மையின் அடிப்படையில் வாழ்க்கையை அமைத்துக் கொண்டால் வெற்றி நிச்சயம் என்ருர்.

# இஸ்லாமிய அறிஞர் மறைவு; கதீப்மார் சங்கம் அஞ்சலி

இலங்கையில்வாழும் எல்லாச் சமூகங்கள் மத்தியிலும் கண்ணியமாக மதிக்கப்பட்ட பிரபல மார்க்க அறிஞரும் சமூக சேவையாளருமான மர்ஹூம் அல்ஹாஜ் மீரான் முஹிய்ய தீன்ஆலிம் எம்மை விட்டும பிரிந்தது எமது சமுதாயத்துக்கு மட்டுமல்ல, நாட்டுக்கும் ஒரு பேரிழப்பாகும். சிறந்த மார்க்க அறிஞரான அல்ஹாஜ் மீரான் முஹிய்யதீன் ஆலிம், கடந்த ஆறு ஆண்டுகளாக யாழ் மாவட்ட உலமா சபையின் தலைவராக விளங்கி சிறந்த தொண்டாற்றினர் யாழ்ப்பாணத்தில் வாழும் ஏனைய சமூகங்களின் பொது வைபவங்களில் முஸ்லிம்களின் சார்பில் கலந்து கொண்டு ஓர் இணைப்புப் பாலமாகவும் விளங்கினர், அவர் இலங்கையிலும். தமிழ் நாட்டிலும் தமது திருக்குர்ஆன் விளக்கப் பிரசங்கத்தால் மக்களின் உள்ளங்களைக் கவர்ந்திருந்தார்.

இவ்வாறு யாழ்ப்பாணம் புதுப்பள்ளி வாசலில் மர்ஹூம் மீரா முஹிய்யதீன் ஆலிம் அவர்களின பெயரால் இடம் பெற்ற ''கதமுல்குர்ஆன்'' நிகழ்ச்சியில் இரங்கலுரை நிகழ்த்திய அகில இலங்கை கதீப்மார்கள் சம்மேளனத்தின் தலைவர் மௌலவி கே. எம். எச். காலிதீன் குறிப்பிட்டார்.

அகில இலங்கை கதீப்மார்கள் சம்மேளனமும் யாழ். உலமா சபையும் ஒன்றிணைந்து இவ்வைபவத்தை ஒழுங்கு செய்திருந்தன இவ்வைபவத்துக்கு யாழ். உலமா சபையின் பிரதித் தலைவர் மௌலவி ஓ. எம். அப்துர் ரஸ்ஸாக் (ஜமாலி) தலைமை தாங்கினர்.

ஜனுப் எம். எஸ். எம். ஸிஹாபுத்தீன் அவர்களின் கிருஅததுடன் ஆரம்பமான இவ்வைபவத்தில் தொடர்ந்து உரை நிகழ்த்திய மௌலவி காலிதீன் யாழ்ப்பாண முஸ்லிம்களின் மார்க்கக் கல்வியின் வளர்ச்சியில் மர்ஹூம் மீரா முஹிய்யதீன் ஆலிம் வகித்த பங்கினை தெளிவாக விளக்கினர் மார்க்கப் பிரச்சினைகளில் உடனுக்குடன் தீர்வுகளை வழங்கக்கூடிய ஆற்றலை அவர் பெற்றிருந்தார்; எல்லோருடனும் இனிமையாகப் பழகி இஸ்லாத்தை இலகுவாகப் போதிப்பதில் அவர் மேற்கொண்டிருந்த பணிகளும், பாணியும் தனிச்சிறப்பு வாய்ந்தவை எனவும் மௌலவி காலிதீன் குறிப்பிட்டார். மௌலவி ஓ. எம் அப்துர் ரஸ்ஸாக், மௌலவி எஸ். சதக்கத்துல்லாஹ் ஆகியோர் அன்னருக்காகப் பிரார்த்தனைகளைச் செய்தனர்.

### விஷமிகளின் உபத்திரவம்

(வேலணை)

வேலணை உள்ளூராட்சிமன்ற உப அலுவலக எல்லைக்குள் போடப்பட்டுள்ள பல தெரு விளக்குகள், விஷமிகளினுல் உடைத்தெறியப்பட்டும். களவு போன நிலையிலும் காணப்படுகின்றது சாதாரண மின் குமிழ்கள் மாத்திரமல்ல விலையுயர்ந்த மேர்குரி விளக்குகள் கூட உடைக்கப்பட்டும் திருடப்பட்டும் உள்ளன. இதனல் இரவில் வேலணைப்பகுதி இருளில் மூழ்கியுள்ளது. இக்குறைபாட்டை அறிந்த வேலணை உப அலுவலக அதிகாரம் பெற்ற உத்தியோகஸ்தர் திரு. சி. சிவராசா மீண்டும் மின் விளக்குகள் பொருத்துவதற்கான ஏற்பாட்டை கவனித்துள்ளார். மின்குமிழ் திருடுபவர்களையோ அல்லது உடைப்பவர்களையோ கண்டுபிடிக்கும் படி அவர் பொது மக்களை கேட்டுள்ளார்.

## நான்காவது நினைவஞ்சலி



### அமரர் செல்லப்பா குணரத்தினம்

(குணம் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்)

மறைவு: 8 — 3 — 1981

அன்பின் திருவுருவே! அறிவின் பிறப்பிடமே!
பண்பின் ஒளிச்சுடரே! இனியவரே!

குடும்ப விளக்காய் ஒளிகாட்டி எம்மோடு வாழ்ந்ததை ஒரு பொற்கனவாக்கிவிட்டு, எம்மைத் துன்பக் கடலில் தத்தளிக்க விட்டு, எம் அனைவரையும் மீளாத் துயரில் ஆழ்த்தி, மீளாத்துயில் கொண்டுவிட்ட அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல விநாயகர் திருப்பாதங்களில் எங்கள் கண்ணீர்ப் பூக்களை வைத்துத் தினமும் பிரார்த்தனை செய்கின்ருேம்.

உங்கள் மறைவால் துயருறும்
அன்பு மனைவி
பிள்ளைகள்
குணேந்திரராசன் குணேந்திரராணி

குணம் ஸ்ரோர்ஸ்,
கண்டி வீதி,
கிளிநொச்சி.




✳ மிருசுவில் படித்த மகளிர் திட்டத்தைச் சேர்ந்த பொன்னுத்துரை தங்கரத்தினம் தம்பதிகளின் செல்வப் புதல்வி சாரங்கா தனது முதலாவது பிறந்த நாளை இன்று கொண்டாடுகிருர்,

✳ நாரந்தனை தெற்கு கேதாரநாதன் செல்வநாயகி தம்பதிகளின் மகள் பிருந்தா இன்று தனது மூன்ருவது பிறந்த நாளைக் கொண்டாடுகிருர்.

✳ பருத்தித்துறை பத்மநாதன் ஈஸ்வரி தம்பதிகளின் மகன் மனோகரன் இன்று தனது பத்தாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிருர்.

✳ காங்கேசன்துறை துரைராஜா ராஜேஸ்வரி தம்பதிகளின் மகன் ரகுராஜன் இன்று தனது பத்தாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிருர்,

✳ அராலி தெற்கு நடராஜா கலாநிதி தம்பதிகளின் மகன் சரவணபவன் இன்று தனது ஆருவது பிறந்த நாளைக் கொண்டாடுகிருர்.

### நாவன்மை பண்ணிசை போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

கீரிமலை சிவநெறிக்கழகத்தின் ஆதரவில் நாவன்மை, பண்ணிசைப் போட்டிகளின் இறுதிநிலைப் போட்டிகள் சுன்னுகம் இராமநாதன் கல்லூரியில் எதிர்வரும் பதினரும் திகதி காலையும் பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் எதிர்வரும் பதினேழாம் திகதி காலையும நடைபெறவுள்ளன.

இம்மாதம் பத்தாம் திகதி விணணப்ப முடிவு திகதி என அறிவிக்கபபட்டுள்ளது.

### இலவச விபூதி

(வேலணை)

வேலணை இந்து வளர்ச்சிக்கழகமும, வேலணை இநது இளைஞர் மன்றமும் பசுவின் சாணத்திலிருந்து சுத்தமான விபூதி தயாரித்து இந்து ஆலயங்களுக்கு இலவசமாக வழங்க முன் வநதுள்ளன.

### 31 வது நாள் நினைவஞ்சலி

சோ.வேலாயுதபிள்ளை
(சோவன்னு)

மலர்வு: 1944
உதிர்வு: 06-02-1985



குடும்பத்தின் ஒளிவிளக்காய் அன்பின் திருவுருவாய்; பண்பின் சிகரமாய் பாசத்தின் பிறப்பிடமாய் வாழ்வின் வழிகாட்டியாக வாழ்ந்து காட்டி சமூகத்தின் நன் மதிப்பைப்பெற்ற எம் குல விளக்கே; எங்களை ஆருத் துயரில் ஆழ்த்தி விட்டு மின்னலென மீளாத்துயில் கொண்ட உங்களை என்றும் மறக்காது கலங்கி நின்று உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்ருேம்.

அன்பு மனைவி; மக்கள்
குடும்பத்தினர்

நீர்வேலி
வடக்கு
நீர்வேலி.

### பிறந்த தின வாழ்த்து செல்வி லேகா



கைதடி மேற்கு ஆட்த்தினம் - புஸ்பராணி தம்பதிகளின் புதல்வி லேகா அவர்கள் இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிருர். இவரை அம்மா, அப்பா, மற்றும் உறவினர் அனைவரும் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிருர்கள்.

### திறப்பு விழாவும் பெயர் சூட்டலும்

(நல்லூர்)

யாழ். பரி. யோவான் கல்லூரியின் ஆரம்ப பாடசாலைப் பகுதியில் சுமார் ஆறுலட்சம் ரூபா செலவில் கட்டி முடிக்கப்பட்டிருக்கும் பத்து வகுப்பறைகளைக் கொண்ட இரண்டு மாடிக் கட்டடத்தை தென்னிந்திய திருச்சபையின் யாழ். மறைமாவட்டத்தின் பேராயர் பேரருட் திரு. டி. யே. அம்பலவாணர் ஆண்டகை ஆசிர்வதித்து இம்மாதம் பதினேராம் திகதி திறந்து வைப்பார்.

இம்மண்டபத்திற்கு கல்லூரியின் முன்னுள் அதிபர் திரு. கே. பூரணபிள்ளையின் பெயர் திரைநீக்கஞ் செய்து வைக்கப்படும்.

அதிபர் திரு. சி. ஈ. ஆனந்தராஜன் தலைமையில் மிகவும் அமைதியான முறையில் இத்திறப்பு விழா நடைபெறும். கல்லூரியின் தொழிற்கூடத்திற்கு கல்லூரியின் முன்னுள் அதிபர் காலஞ்சென்ற திரு. பி ரி. மத்தாயின் பெயர் சூட்டப்படும் இப்பெயர்க்கல் படிவத்தை சுண்டுக்குளி மகளிர் கல்லூரியின் முன்னுள் அதிபர் திருமதி ஜி எஸ். செல்லையா திரை நீக்கஞ் செய்து வைப்பார்.

சுமார் இரண்டு இலட்சம் ரூபா செலவில புதிதாக கட்டி முடிக்கப்பட்டிருக்கும் விளையாட்டரங்கிற்கு கல்லூரியின் முன்னுள் ஆசிரியர் காலஞ் சென்ற திரு ஈ எம். பொன்னுத்துரையின் பெயர் சூட்டப்படும் இப்பெயர்க்கல்லை யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி உயர் திரு. ஜே. ஜீ. ஆசிர்வாதம் திரை நீக்கஞ்செய்து விளையாட்டரங்கைத் திறந்து வைப்பார். விளையாட்டரங்கில திரு சி. ஈ. ஆனந்தராஜன் தலைமையில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் பேரருட் திரு. டி.யே அம்பலவாணா ஆண்டகை, யாழ்ப்பாண அங்கிலிக்கன் திருச்சபையின் ஆர்ச். டீக்கனும் கல்லூரியின் முகாமையாளருமான அருட் திரு.சாம் டி ஹோர் சிங்கடன் அடிகளார் உட்படப் பலர் பேசுவர்.

ஈழமுரசு



உதய சிந்தனை

பிற்காலத்தைப் பற்றிச் சிந்தியாமலிருந்தால், உனக்குப் பிற்காலமே இராது. - கல்ஸ்வர்தி

37 கண்டி வீதி யாழ்ப்பாணம் தொலைபேசி 23336

# இதய ஒலி

8 3-85 வெள்ளிக்கிழமை (இரத்தாக்ஷி மாசி 25 )

## நன்றி சொல்வோம் நன்றே செய்வீர்!

எந்தவொரு செயலைச் செய்வதானாலும் சரி, அதில் ஒழுக்கம், கட்டுப்பாடு என்பன இருக்க வேண்டும்.

சரியான தலைமைத்துவம் இருக்குமானால், இவையிரண்டும் தாமாகவே வந்து சேரும்.

நாட்டுக்கு மட்டுமன்றி, வீட்டுக்கும் கூட சிரான தலைமைத் துவமும், அதன் கீழான ஒழுக்கமும் கட்டுப்பாடும் அத்தியாவசிய மாகும். இல்லாவிடின், சிறு சிறு விஷயங்களைக் கூட திட்ட மிட்டபடி செய்ய முடியாது போய்விடுமென்பதை விட, பயங்கர மான தோல்விகளையும் சந்திக்க நேரிடும்.

இவ்வாறான தோல்விகள், தனி மனிதனை மட்டுமன்றி, முழுச் சமூகத்தையும், அல்லது இனத்தையும் விரகதியின் விளிம்புக்குக் கொண்டு சென்று விடும்.

அண்மைக் காலங்களில் இந்தப் பிரதேசத்தில் இவ்வாறான பல சம்பவங்கள் இடம் பெற்றதுண்டு. அதனை நாம் வன்மை யாகக் கண்டித்ததுமுண்டு.

'பிழைகள் திருத்தப்பட வேண்டுமென்ற' இதய சுத்தியுடன் மட்டுமேயன்றி, வெறுமனே கண்டிக்க வேண்டுமென்ற எண் ணத்துடன் அவை எழுதப்பட்டவையல்ல என்பதைச் சுட்டிக் காட்ட வேண்டியதில்லை.

இன்றுடன் முடிவடையும் ஜி. சி. ஈ. சாதாரண தரத்துக் கான விசேஷ பரீட்சை, கடந்த பத்துத் தினங்களாக மிகவும் கட்டுப்பாட்டுடன், எந்த ஒழுங்கீனமோ, இடைஞ்சலோ இன்றி நடந்து முடிவதை நினைக்கும்போது, அதற்காக ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றி சொல்ல வேண்டியதும் எமது கடமையாகின்றது.

பிழைகளைக் கண்டிப்பதற்குள்ள உரிமை, நல்லவைகளை மனம் திறந்து பாராட்டுவதற்கும் இருக்க வேண்டும். அதுவே, பத்திரிகா தர்மம்.

ஏற்கனவே குழப்பப்பட்ட பரீட்சையினால் சஞ்சலமடைந்த மாணவ மணிகள், இம்முறைப் பரீட்சையும் என்னவாகுமோ என்று ஏங்கியிருந்ததை நாம் நன்கறிவோம்.

பல பெற்றோர்கள் பரீட்சை குழப்பமின்றி நடைபெற வேண்டு மென்று வேண்டாத தெய்வங்களில்லை.

எமக்கு வந்த பல கடிதங்கள் மாணவர்களும், பெற்றோர் களும், ஆசிரியர்களும் என்ன மனநிலையில் இருந்தார்கள் என் பதை நனகு புலப்படுத்தின.

அந்த இதயங்களின் வேதனைகளை உணர்ந்து கொண்ட இயக்கங்கள், அமைப்புக்கள், ஸ்தாபனங்களின் உறுப்பினர்கள் தாமாகவே முன் வந்து, இந்தப் பரீட்சையை வெற்றிகரமாக நடத்தி முடித்திருப்பது வெறும் மகிழ்ச்சியை மட்டும் தருகின் றது என்று சொல்லிவிட முடியாது.

''பெரும் நம்பிக்கையையும் அளித்துள்ளது'' என்று சொல்ல வேண்டும்.

ஒழுக்கத்துடனும், கட்டுப்பாட்டுடனும் நடந்தால் எதனைத் தான் சாதிக்க முடியாது?

ஒழுங்காக நடந்து முடிந்த பரீட்சைக்குக் காரணமானவர் கள், ஒற்றுமையாகவும் செயற்பட்டால் இன்னும் எத்தனையோ காரியங்களைச் சாதிக்க முடியுமென்பதே இப்பொழுது துளிர் விட்டிருக்கும் புது நம்பிக்கையாகும்.

இதற்குப் பரீட்சையின் வெற்றி முதற்படியாகும்!

மாணவர்களின் மனதை வென்றவர்களால், மக்களின் மனதை வெல்ல முடியாது என்று சொல்ல முடியாது!

ஆங்காங்கு நடைபெறும் தனிப்பட்ட களவுகளினாலும், பாடசாலைகள், ஆலயங்களில் நடைபெறும் மன்னிக்க முடியாத கொள்ளைகளினாலும் மனம் நொந்திருக்கும் மக்களுக்கு ஆறுதல் வழங்குவது யார் பொறுப்பு?

சென். பற்றிக்ஸ் கல்லூரியின் இரண்டு லட்சம் ரூபா பணத்தை 'இயக்கம்' என்று கூறிச் சூறையாடியவர்கள் இதுவரை பிடி பட்டார்களா?

இந்தப் பணத்தைத் திருப்பித் தருமாறு எத்தனை தடவை உருக்கமான வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டன? யாராவது செவி சாய்த்தனரா?

தாய்க்குலத்தின் தவக்கோயிலாக விளங்கும் தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயத்தை உடைத்துக் கொள்ளை நடத்திய வர்கள் யார்?

இவ்வாறான சம்பவங்கள் நடைபெற்றதும், அது சம்பந்தமான அறிக்கைகளை விடுவதுடன். ஒதுங்கிக் கொள்வது சரியா?

மக்களின் மனம் நோகும் வகையில் நடந்து கொள்பவர்களை, இனம் காண வேண்டாமா?

பரீட்சையை வெற்றிகரமாக நடத்தி முடித்ததால், இளைஞர் மீதுள்ள நம்பிக்கை மக்களுக்கு அதிகரித்து விட்டது.

அதனைப் பாதுகாக்க வேண்டியதே அனைவரதும் தலையாய பொறுப்பாகும்.

அமெரிக்காவில் அரசியல் புகலிடம் பெற்று மீண்ட

## தென் கொரிய எதிர்க்கட்சி தலைவர் அரசியல் தடை அரசினால் நீக்கம்!

(லண்டன்)

தென் கொரிய அரசு எதிர்க்கட்சித் தலைவர் கிம்-டய்-ஜங்கிற்கு விதித்திருந்த அரசியல் தடைகளை ஓரளவு நீக்கியுள்ளது. எனினும் அவர் கட்சி ஒன்றில் சேரவோ தேர்தலில் போட்டியிடவோ அனுமதிக்கப்படமாட்டார் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது. தேசத்துரோகக் குற்றச்சாட்டின் பேரில் எதிர்க்கட்சித் தலைவருக்கு இருபது வருடகால ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை ஏற்கனவே விதிக்கப்பட்டுள்ளது நகரிலுள்ள தனது இல்லத்தில் காவலில் வைக்கப்பட்டிருந்த அவருக்கு இப்போது நாட்டின் எப்பகுதிக்கும் செல்ல அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

இது இவ்வாறு இருக்க, தென்கொரியாவின் எதிர்க் கட்சித்தலைவர் அமெரிக்காவில் அரசியல் புகலிடம் பெற்று விட்டு கடந்த மாதம் தான் தாயகம் திரும்பினார்.

அவரைக் கூட்டி வந்த அமெரிக்க அதிகாரிகளும் அவரும் விமான நிலையத்தில் வந்து இறங்கியதும் தாக்கப்பட்டனர் என்பதும் இச்சம்பவம் பெரும் பரபரப்பை சர்வ தேச ரீதியில் உண்டாக்கியிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கவை.

### கூட்டு முயற்சி

(கெய்ரோ)

மத்திய கிழக்கு விவகாரத்தில் கூட்டுத்திட்டம் ஒன்றினை உருவாக்குவதற்கு எகிப்திய ஜனாதிபதி முபாரக்கும். ஜோர்தான் மன்னர் ஹுசெனும் முயன்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### சிலி பூமியதிர்ச்சி: இருபது கோடி டாலர்வரை நஷ்டம்

(லண்டன்)

சிலியில் உண்டான பூமியதிர்ச்சியால் இருபது கோடி டாலர் நஷ்டம் விளைந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

சேதமடைந்த வீடுகளில் இருந்து சமூகத் துரோகிகள் உடைமைகளைத் திருடி வருவதால் அங்கு இரவுநேர ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி பூமியதிர்ச்சியில் 150 பேர்வரை மாண்டதும் பலர் காயமுற்றதும் தெரிந்ததே.

### என். டி. ஆரின் புதிய அரசு

(ஹைதராபாத்)

ஆந்திர மாநிலத்தில் திரு. என். டி. ராமராவ் தலைமையிலான புதிய அமைச்சரவை நாளை சனிக்கிழமை பதவியேற்கவுள்ளது.

கப்பல் பார்க்கும் ஆசையினால்

### படகுப் பயணிகளுக்கு வினை நீரில் மூழ்கி 12 பேர் மரணம்

(கடலூர்)

கடலூர் துறைமுகத்துக்கு அருகே நிகழ்ந்த படகு விபத்து ஒன்றில் பன்னிரண்டு பேர் நீரில் மூழ்கி மாண்டதாக அறிவிக்கப்படுகிறது. படகில் பயணம் செய்த முப்பது பேர் நீந்தி கரை சேர்ந்துள்ளனர்.

இப்படகில் நூறு பேர் வரை பயணம் செய்ததாகவும் அலுவல் முடிந்து வருகையில் நங்கூரமிடப்பட்டிருந்த கப்பல் ஒன்றைப் பார்க்கும் ஆவலில் படகு திருப்பப்பட்ட போது கவிழ்ந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பன்னிரண்டு சடலங்களே மீட்கப்பட்டுள்ள போதிலும் மாண்டோர் தொகை மேலும் அதிகம் என்று கருதப்படுகிறது

### நவம்பரில் ராணியின் விஜயம்

(ஸ்பெயின்)

எலிசபெத் மகாராணி நவம்பர் மாதத்தில் ட்ரினிதத்துக்கும் டுபெக்கோவுக்கும் மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு செல்லவுள்ளார்.

இதனை பிரிட்டிஷ் அரசின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். மகாராணி கடைசியாக 1966ம் ஆண்டில் தான் ட்ரினிதத்துக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

### படுதோல்வி

(பாண்டிச்சேரி)

பாண்டிச்சேரி தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆதரவுடன் போட்டியிட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, முஸ்லீம் லீக் ஆகியன ஒரு ஸ்தானம் கூட பெற முடியாது படுதோல்வியடைந்துள்ளது.

பாரதத்தில் யூகோ. பிரதிநிதி

### அணிசேரா இயக்க உறுப்பு நாடு பாதுகாப்பு ஆராய்வு

(பெல்கிரேட்)

யூகோஸ்லாவிய வெளியுறவுச் செயலர் லாங்கர் பாரத வெளியுறவுச் செயலர் ராமேஷ் பண்டாரியைச் சந்தித்து பல தரப்பட்ட விடயங்கள் குறித்து பேச்சு வார்த்தை நடத்தியுள்ளார்.

அணிசேரா இயக்கத்தின் உறுப்பு நாடுகளின் பந்தோபஸ்து நிலை குறித்து ஆராயப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பாரதத்தில் ஒரு வார கால விஜயத்தை யூகோஸ்லாவிய வெளியுறவுச் செயலர் மேற்கொண்டுள்ளார்.

### ஹெக்டேக்கு 42 ஆயிரம் பெரும்பான்மை

(பெங்களூர்)

கர்னாடகத் தேர்தலில் முதலமைச்சர் திரு. ராமகிருஷ்ண ஹெக்டே நாற்பத்து இரண்டாயிரம் அதிகப்படியான வாக்குகளால் வெற்றி பெற்றுள்ளார்.

மாநில ஜனதாக் கட்சியின் செயற்குழு இன்று கூடி தனது புதிய தலைவரைத் தேர்ந்தெடுக்கவுள்ளது.

### கொலைவழக்கு ஒத்திவைப்பு

(மணிலா)

பிலிப்பைன்ஸ் எதிர்க்கட்சித் தலைவர் அக்கினோ கொலை வழக்கு சாட்சிகள் சமுகமளிக்காததால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இராணுவத் தலைவர் மற்றும் இருபத்தைந்து பேர் இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர்.

### மெக்ஸிக்கோவில் கோர விபத்து

(மெக்ஸிக்கோ)

மெக்ஸிக்கோவில் நிகழ்ந்த பயணிகள் பஸ்ஸிற்கும் சமையல் காஸ் கொண்டுவந்த வண்டிக்கும் இடையிலான விபத்தில் இருபத்தேழு பேர் மாண்டனர். ஐம்பதுபேர் காயமடைந்தனர் என்றும் நேற்று அறிவிக்கப்பட்டது.

விண்வெளியில் ஆயுத பாவனை:

### அமெரிக்காவுக்கு ஆதரவு அளிக்க இத்தாலி முடிவு

(ரோம்)

அமெரிக்காவின் விண்வெளியில் ஆயுத பாவனைத் திட்டத்திற்கு இத்தாலி தனது ஆதரவைத் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் இத் திட்டம் சர்வதேச ரீதியில் சர்ச்சைக்குரிய ஒன்றாக இருந்து வருகிறது. சோவியத் யூனியனுட இதனை வன்மையாக எதிர்த்து வருகிறது.

ஆயினும் இத்தாலிப் பிரதம மந்திரி கிரெஸ்க்கி அமெரிக்காவுக்குத் தாம் ஆதரவளித்து உரிய பங்களிப்பை வழங்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

### ஆராய்வு

(லண்டன்)

பின்லாந்தும் மேற்கு ஜெர்மனியும் பரஸ்பர நல்லுறவு வலுப்படுத்தல் குறித்து ஆராய்ந்து வருகின்றன.

தென் லெபனான் குண்டு வெடிப்பில்

### கெரில்லா தலைவர் இருவர் உட்பட 12 பேர் கொலை

(லெபனான்)

குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றில் இரு கெரில்லாத் தலைவர்கள் உட்பட பன்னிரண்டு பேர் மாண்டதாக தென் லெபனானின் முஸ்லிம் கிராமம் ஒன்றிலிருந்து அறிவிக்கப்படுகிறது.

நாற்பது பேர் இதில் காயமுற்றனர்.

தென் லெபனான் நிலையில் இச்சம்பவம் பெரும் தாக்கத்தை உண்டாக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

8 3. 1985 வெள்ளிக்கிழமை

# ஈழமுரசு

## பெண் உதவி அரச அதிபரிடம் படையெடுத்த வேலணை பெண்கள்

(வேலணை)

பெண் உதவி அரசாங்க அதிபரிடம் பெண்கள் படையெடுத்துச் சென்ற சம்பவம் வேலணை உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது. வேலணைப்பகுதியை ச் சேர்ந்த மீனவப் பெண்கள் தங்கள் குடும்பங்களுக்கு அரசாங்கத்தினாலும், மற்றும் பொது ஸ்தாபனங்களாலும் வழங்கப்பட்டு வரும் பொருட்கள் மோசடி செய்யப்படுவதாக கூறி மேற்படிகாரியாலயத்தை முற்றுகையிட்டு உதவி அரசாங்க அதிபருக்கு மேற்படி புகாரை தெரிவித்தனர் தான் உரிய நடவடிக்கை எடுப்பதாக உதவி அரசாங்க அதிபர் உறுதியளித்ததைத் தொடர்ந்து அவர்கள் வீடுகளுக்குத் திரும்பினர். வேலணை உதவி அரசாங்க அதிபராக செல்வி. மைதிலி சோமசுந்தரம் இம்மாதம்முதல் பணியாற்றிவருகிறார்.

### அச்சுவேலியில் நடந்த சம்பவம்

# இயக்கத்தின் பெயரில் இரவுக் கொள்ளை நடத்திய ஒரு கோஷ்டி அகப்பட்டது!

(அச்சுவேலி)

இயக்கத்தின் பெயரைக்கூறி இரவுக் கொள்ளையில் ஈடுபட்டவர்கள் கையும் மெய்யுமாக இயக்க இளைஞர்களிடம் அகப்பட்டுக் கொண்டனர்.

அச்சுவேலி வடக்கு ஊரியான் என்ற கிராமத்தில் புதன் கிழமை நள்ளிரவு இயக்கத்தின் பெயரைக்கூறி பல வீடுகளில் சோதனை நடத்தி பொருட்களை கொள்ளை அடித்த இளைஞர் குழுவை அவ்வூர் வாலிபர்கள் சுற்றி வளைத்த போது கொள்ளையில் ஈடுபட்ட இளைஞர் குழுவைச் சேர்ந்த ஒருவர் டைனமற் வெடி ஒன்றை வாலிபர்களை நோக்கி வீச முயன்ற போது வெடி அவரது கைக்குள் வெடித்ததால் அவர் பலத்த காயத்திற்கு உள்ளானதாகத் தெரிய வந்துள்ளது.

கொள்ளையர் குழுவில் பலர் இருந்த போதிலும் சிலர் ஓடித் தப்பி விட்டதாக கூறப்படுகின்றது

ஒரு வாலிபர் தீவிரவாத இளைஞர்களின் விசாரணைக்கு உள்ளாக்கப் பட்டுள்ளதாக அறியப்படுகின்றது. இரவுக் கொள்ளையில் இயக்கத்தின் பெயரைப் பயன்படுத்தி ஈடுபட்ட குழுவினர் போலி ஆயுதங்களைப் பயன்படுத்தியதாகவும் ஒரு வீட்டுச் சொந்தக்காரரை கட்டி வைத்து அவரது வீட்டை சோதனை இட்ட போதிலும் குறிப்பிடத்தக்களவு நகை, பணம் அந்த வீட்டில் கிடைக்கவில்லையெனவும் கூறப்படுகிறது.

இவர்கள் அடுத்த வீடொன்றில் தங்க நகைகளையும் பணத்தையும் துவிச்சக்கரவண்டிகளையும் கொள்ளை அடித்துச் சென்றனராம்.

### நேற்று முன்தினம் 622 பேர்:

## இலங்கை அகதிகள் தொகை 15 ஆயிரமாக அதிகரிப்பு!

அறுநூற்றி இருபத்திரண்டு இலங்கைத் தமிழ் அகதிகள் பத்து பிளாஸ்ட்டிக்படகுகளில் இராமேஸ்வரத்திற்கு நேற்று முன்தினம் வந்து சேர்ந்ததாக இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் நேற்று அறிவித்தார்.

இவர்களுடன் சேர்த்து கடந்த ஒரு மாதகாலத்தில் தமிழகத்திற்கு அகதிகளாகச் சென்ற இலங்கைத் தமிழர்களின் எண்ணிக்கை 14,962 ஆக உயர்ந்துள்ளது.

இலங்கைத் தமிழ் அகதிகளுக்காக இரண்டு கோடி ரூபா செலவில் ஆயிரம் சிறு வீடுகளை மண்டபத்தில் கட்டுவதற்கான திட்டத்திற்கு தமிழக அரசு அனுமதித்துள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது. இவற்றில் சுமார் இரண்டாயிரம் குடும்பங்களைக் குடியேற்ற முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

### அடையாளம்..

கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தின் போது இரண்டு பேர் கொல்லப்பட்டதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

நேற்றுமுன்தினம் வடபகுதியிலுள்ள தீவிரவாதிகளின் முகாம் ஒன்றை பாதுகாப்புப் படையினர் சுற்றி வளைத்த போது கொல்லப்பட்ட பத்துப் பேரில் இரண்டு பேர் தீவிரவாத இயக்கத்தின் முக்கியமானவர்களென்றும் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தைச் (டெலோ) சேர்ந்தவர்களை இவர்கள் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது

### வடமராட்சி.,

—1-ஆம் பக்கத் தொடர்

மக்கள் நடமாட்டம் மிகக் குறைவாக காணப்பட்டது. இப்பகுதிக்கு செல்லும் பிரதான பாதையின் வல்லை - மண்டான சந்தியில் ஆயுதப்படையினர் கடும் சோதனை மேற்கொண்டனர். இதனால மினிவான்கள் தனியார் வாகனங்கள் சேவையில் ஈடுபடவில்லை

ஜீ. சி. ஈ. பரீட்சைகள் அமைதியாக நடைபெற்றன பருத்தித்துறை - யாழ் பஸ்சேவை நேற்று வழமைபோல நடைபெற்றது

### களனியவில் அகில இந்திய வானொலி நேயர் மன்றம்

### சத்வால் ஆரம்பித்து வைத்தார்

(கொழும்பு)

இலங்கையில் முதற்தடவையாக 'அகில இந்திய வானொலி நேயர் மன்றம்' நேற்று முன்தினம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

களனி வித்தியாலங்கார பிரிவேனாவில் நடைபெற்ற அடக்கமான வைபவமொன்றில், இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவர் திரு எஸ். ஜே எஸ். சத்வால் இதனை அங்குரார்ப்பணம் செய்துவைத்தார்.

தூதுவர் சத்வால் இவ்வைபவத்தில் உரையாற்றுகையில், இந்த நாட்டில் இப்போது உருவாகியிருக்கும் அசாதாரண சூழ்நிலை விரைவில் நீங்கி விடும் என்று தாம் நம்புவதாகக் குறிப்பிட்டார்.

இனங்களுக்கிடையில் சகோதரத்துவத்தையும், வேறுபாடற்ற அன்னியோன்னிய உறவையும் உருவாக்க ஒலிபரப்பு நிகழ்ச்சிகள் முக்கிய பங்கு வகிக்கின்றன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

### தமிழர் தனிப்..

—1-ம் பக்கத் தொடர்

அதிர்ச்சியையும் வெளிப்படுத்துகின்றோம் அவ்வாலயத்தின் நிர்வாகியாகிய சிவத்தமிழ்ச் செல்வி துர்க்காதுரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கட்கு ஏற்பட்ட இம்சையையும் அவமதிப்பையும் அறிந்து தமிழ் உலகமே குறிப்பாகத் தமிழ்ப் பெண் உலகமே வெட்கித் தலைகுனியும் நிலைதோன்றியுள்ளது

தமிழர்களுக்கென்ற ஒரு தனிப்பண்பாடு ஒன்றுண்டு. அதனை எந்நிலையிலும் கைவிடுதல் ஆகாது. இவ்வாலயத்துக்கு நடைபெற்ற அவமானம் வேறு எந்த சைவ ஆலயத்திற்கு மட்டுமன்றி ஏனைய சமய வழிபாட்டிடங்களுக்கும் நடைபெற்றால் அதையும் நாம் சகிக்க முடியாது என்பதனை மிக மனவருத்தத்துடனும் கண்டிப்பாகவும் கூறிக்கொள்கிறோம் என்று இவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

### தொடர்ந்து,,,

—1-ஆம் பக்கத் தொடர்

அதிகாரிகளிடம் சென்று முறையிட்டு வருகின்றனர்.

கடந்த மாதம் 23ம் திகதி நடைபெற்ற வங்கிக் கொள்ளை தொடர்பாக இரு இலங்கை வங்கி ஊழியர்கள் தடுத்து வைக்கப்பட்டிருப்பதை ஆட்சேபித்து குருநகர் வங்கிக் கிளை ஊழியர்கள் வேலைக்குச் செல்லாதிருக்கின்றனர்.

இது தொடர்பாக வங்கித் தலைமை அலுவலகம் 'மௌனம்' சாதித்து வருவதும் இங்குள்ள ஊழியர்கள் மத்தியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாக வங்கிப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

### செவ்வாய்க்கிழமை ,,

— 1 ஆம் பக்கத் தொடர்

நாட்களில் யார் யாருக்கு பென்ஷன் காசோலை வழங்கப்படுமென்று அதற்கு முன்னர் அறிவிக்கப்படும் குருநகர் இலங்கை வங்கியில் பென்ஷன் பெறுபவர்களுக்கு மட்டுமே இந்த ஏற்பாட்டின் கீழ் தனித்தனிக் காசோலை வழங்கப்படுமென்பது குறிப்பிடத்தக்கது.

### குருநகர் மக்கள்-,,

—1-ம் பக்கத் தொடர்

யுடன் இவர்கள் எடுத்துச் சென்றனர்.

இப்பகுதியினூடாக செல்பவர்களும் தவறாது கடும் சோதனைக் குட்படுத்தப்படுகின்றனர்.

### மாமாங்கம்,.

—1-ஆம் பக்கத் தொடர்

மிவு உடைக்கப்பட்டு, சாரணச் சிறுவரின் சீருடைகள் களவாடப்பட்டுள்ளதாகவும் புகார் செய்யப்பட்டுள்ளது.

### கரை ஒதுங்கிய.,

—1-ம் பக்கத் தொடர்

லத்தை பொது மக்கள் பார்வையிட்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப் பட்டதைத் தொடர்ந்து சடலத்திற்குரிய உறவினர்களால் சடலம் எடுத்துச் செல்லப்பட்டது. இவர் கடலில் வைத்து இனந் தெரியாதவர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கலாமென கருதப் படுகிறது. இச் சடலம் புங்குடுதீவைச் சேர்ந்த சிவம் என்பவரினதாகும்.

### சட்டசபை இன்று ஆரம்பம்

தமிழ்நாடு சட்டசபையின் எட்டாவது கூட்டத் தொடர் இன்று காலை பத்து மணிக்கு ஆரம்பமாகவுள்ளது தமிழக ஆளுநர் திரு. குரானா இதனை ஆரம்பித்து வைத்து அங்குரார்ப்பண உரையாற்றுவார்.

### 20 சதத்துக்கு 350 ரூபா

புத்தூரிலுள்ள வர்த்தகர் ஒருவர் ஒரு போத்தல் இனிப்பு சோடாவை கட்டுப்பாட்டு விலையிலும் இருபது சதம் கூட்டி விற்றதாக குற்றம் சாட்டி தொடரப்பட்ட வழக்கு யாழ் நீதிவான் திரு. எஸ் நாகராசா முன் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது நீதிவான் முன்னூற்று ஐம்பது ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார். யாழ். விலைக் கட்டுப்பாட்டதிகாரி திரு. ரீ. சிவேஸ்வரத்தம்பி வழக்கை நடாத்தினார்.

### பூஸா...

—1-ஆம் பக்கத் தொடர்

கடந்த வாரம் விடுதலையாகிக் கொழும்பு கொண்டுவரப்பட்டு பின்னர் மீண்டும் பூஸாவுக்குக் கொண்டு செல்லப்பட்ட 49 இளைஞர்களும் இதில் அடங்குவர் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது

இம்மாதக் கடைசியில் மேலும் ஒரு குழுவினர் விடுதலை பெறலாமெனவும் தெரிய வந்துள்ளது

### யாழ் வீதிகளிலுள்ள..

— 1-ம் பக்கத் தொடர்

மல், யாழ்ப்பாணம் பெரிய தபாற் கந்தோரில் தபால் பெட்டியில் மட்டும் போடுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

அதேவேளையில் மாநகர எல்லைக்குள் இருக்கும் உப தபால் நிலையங்களில் ஒப்படைக்கப்படும் பதிவுக் கடிதங்கள், மணி ஓடர் போன்றவைகளும் சேகரிப்பதற்கு வாகன வசதியில்லாததால் உப தபாலகங்களிலேயே தேங்கிக் கிடப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வடபகுதிக் கடலில்..,

— 1-ம் பக்கத் தொடர்

லின்றி, வாழ வழியின்றி, அவஸ்தைப்பட்டுக் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்ட பல புகார்களை அடுத்தே இந் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

## பதவி வெற்றிடம்

### செய்தி ஆசிரியர் NEWS EDITOR

ஈழமுரசு பத்திரிகையின் செய்தி ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. உள்நாட்டு, வெளிநாட்டுச் செய்திகளில் போதிய அறிவும், தமிழ் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் நல்ல தேர்ச்சியும், மொழிபெயர்க்கும் ஆற்றலும், பத்திரிகை அலுவலகமொன்றின் செய்திப் பிரிவில் ஆகக் குறைந்தது ஐந்து வருடத்துக்குக் குறையாத தொழில் அனுபவமும் பெற்றவர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

கல்விச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், தொழில் அனுபவச் சான்றிதழ் ஆகியவற்றின் பிரதிகளையும் விண்ணப்பத்துடன் இணைத்து எதிர்பார்க்கும் மாதச் சம்பளத்தையும் குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும்.

முற்றிலும் திறமை, தகுதி ஆகியவற்றை அடிப்படையாக வைத்தே நியமனம் வழங்கப்படும். எவர் மூலமாவது தனிப்பட்ட சிபார்சு செய்வித்து இப்பதவியைப் பெற முயற்சி எடுத்தால் சம்பந்தப்பட்டவரின் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பங்கள் நேரில் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. என்வலப்பின் இடது பக்க மேல் மூலையில் ''செய்தி ஆசிரியர் பதவி'' எனக்குறிப்பிட்டு, பதிவுத்தபாலில் மட்டும் விண்ணப்பங்களை அனுப்பவும்.

சகல விண்ணப்பங்களும் மிகவும் அந்தரங்கமாக வைத்திருக்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி 15-3-1985. விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர்,
ஈழமுரசு,
37, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

### பத்மநாதன் பத்மரூபனா

மலர்வு : 6-4-1965 உதிர்வு : 6-2-1985



அன்பில் திருவுருவாய் அனைவருக்கும் இனியவளாய் எங்கள் குடும்பத்தின் செல்வமாய் விளங்கிய நீ எம்மை துன்பக் கடலில் ஆழ்த்தி விட்டு இறைவனடி சேர்ந்து விட்டாய்.

உனது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

குழுக்கண்டி லேன்,
கட்டப்பிராய்,
கோப்பாய்.

உனது பிரிவால் துயருறும்
அம்மா, அப்பா,
தங்கை.

''ஈழமுரசு'' சாயிபாபா அட்வர்டைசிங் அசோசியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப்பகுதியில் 08-03-1985 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி:- 23336.